செ.வெ.எண். 173 நாள். 24.02.2011

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத் துறை, தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மற்றும் சென்னை –அரசு கவின்கலைக் கல்லூரி ஆகியோர் இணைந்து, கவின் கலைக் கல்லூரியின் மாணவர்களுக்கான ஓவியப் பயிற்சி முகாம் 24.2.2011 மற்றும் 25.2.2011 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறுகிறது.

கல்லூரியில் வண்ணக்கலைத் துறையில் இளங்கவின்கலைப் பட்டப் படிப்பு மற்றும் முதுகவின்கலைப் பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் ஏறத்தாழ 50 எண்ணிக்கை மாணவர்கள் இவ்வோவிய பயிற்சி முகாமில் பங்கேற்க உள்ளார்கள். இவ்வோவிய பயிற்சி முகாமில் பங்குபெறும் மாணவர்கள், தங்களது கலைத்திறனை மேம்படுத்தும் வகையிலும், அதனை முழுமையாக வெளிக்கொணரும் வகையிலும், தங்களது கற்பனையில் தோன்றும் காட்சிகளுக்கு வரைபடத்தில் உயிர் அளிக்கும் வகையில் வண்ணம் தீட்ட உள்ளார்கள். மாணவர்கள் உருவாக்கும் இவ்வோவியப் படைப்புகளை ஊக்குவிக்கும் விதமாக பயிற்சி முகாம் பொது மக்களின் பார்வைக்கு அனுமதிக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் கலைபண்பாட்டுத் துறையின் ஆணையர் திரு ப.அ.மணி, இ.வ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு சமூகநல வாரியத் தலைவர் கவிஞர் சல்மா ஆகியோர் கலந்து கொள்கின்றார்கள்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9